[28 th March 1969

(இ) ஆமெனில், 1968-ல் மீன் பிடிக்க அனுமதித்து உத்தரவிடப் பட்டதா ?

(உ) ஆமெனில் எவ்வளவு மதிப்பு மீன் கிடைத்தது ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ) (இ) &(உ)பெரியாறு ஏரியில் மீன்பிடி உரிமை, பீர்மேடு வேட்டையாளர்க் கழகத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 300 குத்தகைத்தொகையில் 1–12–1941 முதல் 10 ஆண்டுக்காலத்திற்கு கொடுக்கப்பட்டது. இந்தத் குத்தகைக் கால அளவு முடிவடைந்த பிறகு பொதுப்பணித்துறையினர், இந்த ஏரியில் மீன் பிடி உரிமையைத் தனிப்பட்டவர்களுக்கு அளித்து வந்தனர். இந்த ஏரியில் மீன் பிடிப் பதைத் துறையினரே மேற்கொள்ள வேண்டும் என்றும் இனிமேல் இதற்கான உரிமையைத் தனிப்பட்டவர்களுக்கோ நிறுவனங்களுக்கோ அளிக்கக்கூடாது என்றும் 1968 பிப்ரவரி திங்களில் அரசு முடிவு செய்தது. இதன்படி, பெரியாறு ஏரியில் உள்ள மீனளத்தைப் பயன் படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு, மீனளத் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டார். நீரியல் பிரிவினர் இரண்டு நாட்களுக்கு மீன் பிடி பணியை மேற்கொண்டனர் என்று மீனளத்துறை இயக்குநர் அறிவித்துள்ளார். இந்த ஏரியில் இரண்டு நாட்களில் 10 ரூபாய் மதிப்புள்ள 20 கிலோவுக்குக் குறைவான பொம்மீன் (Barbastor) திலாப்பியா போன்ற மீன்கள் கிடைத்தன. இந்த ஏரியில் உள்ள மீனவளத்தைப் பயன்படுத்துவதற்காகப் பெருந்தொகையை முதலீடுசெய்வதற்கு முன்பு இந்த ஏரியில் தனிப்பட்டவர்கள் அனுமதி யின்றி மீன் பிடிப்பதைத் தடை செய்யவேண்டுமென்று மீனளத்துறை இயக்குநர் கருத்தறிவித்துள்ளார். கேரள மாநில எல்லைப் பகுதியில் உள்ள இந்தப் பெரியாறு ஏரியில் திருட்டுத்தனமாக மீன் பிடிப்பதையோ அனுமதியின்றி மீன்பிடிப்பதையோ தடுப்பதில் சட்டப்படிக்கான இடர்பாடு கள் உள்ளன. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

Storage of Paddy

* 266 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) the authorities who are responsible for storing the procured paddy from Thanjavur in the silos at Tiruvaiyaru ;

(*b*) the authorities who are responsible for the damage and reduction in quantity of paddy in that place ; and

(*c*) the quantity of paddy which has been lost in storage so far ?

நெல் இருப்பு.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) :—மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினைக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் செய்யும் நெல் திருவை யாறு சைலோவில் இருப்பு செய்வது யார் பொறுப்பு ?

(இ) அங்கு கெட்டுப் போகும் நெல்லுக்கும் குறை ஏற்படுதலுக்கும் யார் பொறுப்பு ?

(உ) இதுவரை எவ்வளவு அளவு நெல் குறைந்தது ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ), (இ) திருவையாற்றில் சைலோக்கள் இல்லை. இருப்பினும், கொள்முதல் செய்யப்பட்ட நெல், திருவாரூரில் உள்ள நவீன அரைவு ஆலையில், தஞ்சாவூர் கோ-ஆப்ப ரேட்டிவ் மார்க்கெட்டிங் பெடரேஷனல் இருப்பு செய்யப்படுகிறது. ஆகவே அங்கு சேதமாகிக் குறைந்த நெல்லுக்கு அவர்களே பொறுப் பாளர்கள்.

28th March 1969]

(உ) சேதத்திலுைம் இருப்பு செய்ததிலுைம் இதில் நஷ்டம் இல்லே. **29–4–1967** முதல் **30–9–1968** வரை உள்ள கால அளவில் **24,947** டன் நெல்லே சுத்தப்படுத்தியும் உலர வைத்தும் அரைத்த வகையில் **2,196** டன் நெல் குறைந்ததாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நஷ்டத்தை தஞ்சாவூர் கோ-ஆப்பரேட்டிவ் மார்க்கட்டிங் பெடரேஷன் ஏற்றுக் கொண்டது. ஆகவே அரசுக்கு இந்த வகையில் எவ்வித நஷ்டமும் இல்லே.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலேவர் அவர்களே, உணவுப் பற்றுக்குறை மிகவும் கடுமையாக இருக்கிற இந்த நேரத்தில் அரசுக்கு நஷ்டமில்லே என்றுலும் உணவை நஷ்டப்படுத்தும் எந்தத் துறையாக இருந்தாலும் அந்தத் துறை சம்பந்தப்பட்டவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ? கூட்டுறவு அமைச்சர் அவர்கள் அதைக் கண்காணித்து நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மிஸ்டர் சேர்மன்: அதற்கு உணவு அமைச்சர்தானே பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நெல்லே சுத்தப்படுத்துவதிலும் உலர வைப்பதிலும்தான் நஷ்டம் ஏற்பட்டதாகத் தகவல் கொடுத்திருக்கிருர்கள். அது சம்பந்தமாக ஏற்பட்ட நஷ்டத்திற்கு அவர்கள் பொறுப்பு ஏற்றிருக்கிருர்கள். அரசு அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறது.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTI : Sir, there are quite a number of mechanical driers which have been installed in the co-operative sector. How did it happen that they were not used ? Were they allowed to dry in the mechanical drier ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நவீன முறையில்தான் உலர்த்தப்படுகிறது. நெல்லே சுத்தப்படுத்திய வகையில் எப்படி சுத்தப் படுத்திஞர்களோ தெரியவில்லே. ஆனல் உலர்த்தியது நவீன வகையில் தான்.

திருமதி லஷ்மி கிருஷ்ணமூர்த்தி: இனிமேலாவது அப்படித் தவறு நடக்காமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அது கண்காணிக்கப்படும், எச்சரிக்கையும் செய்யப்படும்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: கூட்டுறவு அமைப்பிற்கோ மொத்த வியாபாரிக்கோ நெல்லே அரிசியாக்குவதற்கு ஒப்படைக்கும்போது ஈரம் மற்ற வகையிலே ஏற்படக் கூடிய சேதாரத்திற்கு இத்தனே சதவிகிதம் அனுமதிப்பது என்று இருக்கிறதே, இப்போது **2,000** டன் குறைவு ஏற்பட்டிருக்கிறது எனும்போது இந்த அளவு அனுமதிக்கப்பட்ட அளவை விட மீறுகிறதா ஒட்டியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அனுமதிக்கப்பட்ட அளவைத் தாண்டித்தான் இருக்கிறது. அவர்களே அதை ஒத்துக்கொண்டிருக்கிருர்கள்.

THIRU K. S. ABDUL WAHAB : Sir, I want to know the method by which the damaged paddy was disposed of.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நெல் கெட்டுப் போகவில்லே குறைந்திருக்கிறது.